Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 24 [06-06-98] ஞாயிற்றுக்கிழமை ஓசை 108

## யாழ். மாநகரசபை பகுதியில் ஆரோக்கிய தாய் சேய் போட்டி

தாய், சேய் நலனை கருத்தில் கொண்டு குறிப்பாக தாய்மார், குழந்தைகள் பள்ளி முன்னிலைப் பிள்ளைகளின் போஷாக்கு நிலைபற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஆரோக்கிய தாய்சேய் போட்டி யாழ். மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள மகப்பேற்று நிலையங்களிலும், சிகிச்சை நிலையங்களிலும் நடத்தப்பட்டது. யுனிசெப் உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்றத்தால் நடத்தப்பட்ட இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசு/சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாநகர ஆணையாளர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்தில் பிரதமவிருந்தினராக சர்வதேச செஞ்சிலுவைச் (4ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப் பாதை திறப்பு விவகாரம்:

# ஐ. நா. அதிகாரி செவ்வாய் வருகிறார்

## அரசாங்கத்தின் நிபந்தனைகள் பற்றி விடுதலைப் புலிகளுடன் பேசுவார்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பாதையை உணவு வாகனங்களின் போக்குவரத்திற்குத் திறந்து விடுவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி டாக்டர் நிக்கிலஸ் யாழ்ப்பாணம் வரவுள்ளார். எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை யாழ். வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படும் டாக்டர் நிக்கிலஸ் அன்று மாலையே பாதை விவகாரம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன்பேச்சுக்களை நடாத்துவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பூநகரிப் பாதையை உணவு லொறிகளின் போக்குவரத்திற்கு திறந்துவிடுவது குறித்த பேச்சுக்கள் பிரேமதாசாவின் மரணத்துடன் தாமதமாகின. இதன் பின்னர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதி புதிய அரசாங்கத்துடன் இது குறித்து பேச்சுக்களை ஆரம்பித்தார். இப் பேச்சுவார்த்தைகளின்போது, புதிய அரசாங்கம் இப் பாதை திறப்பு விவகாரத்தில் அதிக அக்கறை காட்டியதாகவும் தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்தே அகதிகளுக்கான ஐ நா. பிரதிநிதி விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் வரவுள்ளார். செவ்வாய் மாலை இடம் பெறவுள்ள இப் பேச்சுவார்த்தையின்போது அரசாங்கம் பூநகரிப் பாதை திறப்பது குறித்து விதித்துள்ள நிபந்தனைகள் பற்றி பேச்சுக்கள் இடம்பெறும் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை, பூநகரிப் பாதையை உணவு லொறிகளின் போக்குவரத்திற்கு திறந்துவிட விடுதலைப்புலிகள் ஏற்கனவே இணங்கியிருந்தமை தெரிந்ததே.

## மீட்புநிதி சேகரிப்பு

இன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9.00மணிதொடக்கம் 10.00மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்பு நிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நேரத்தில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தமுடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## இன்று சான்றிதழ் வழங்கல்

(தொல்புரம்)

1992 ஆம் ஆண்டு சித்திரை மாதமளவில் நடைபெற்ற தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சிப் பரீட்சையில் சித்தியெய்திய ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். (41)

## பிரேமா பிறந்த தினத்தன்று ஹேமாவின் கட்சி ஆரம்பம்

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசாவின் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ள சுச்சரித்த மக்கள் முன்னணி தனது அங்குரார்ப்பணக் கூட்டத்தை பிரேமதாசாவின் பிறந்த தினமாகிய இம் மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்பொழுது கட்சியை அங்கீகரிக்குமாறு தேர்தல் ஆணையாளரைக்கோரும் மனுசமர்ப்பிப்பது தொடர்பாக ஆராய்வார்கள் என எதிர்பாக்கப்படுகிறது. தற்பொழுது கட்சியின் கொடி, சின்னம் என்பனவற்றை தயாரிப்பதிலும் இக் கட்சியை ஆரம்பிப்பதில் பின்னணியில் இருந்து செயல்படுபவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எறிகணை வீச்சும் பீரங்கித் தாக்குதல்

## மணலாற்றுப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம்பூர்த்தி

## எதிர்க்கட்சிகள் முடிந்தால் பலத்தை நிரூபிக்கட்டும்

### வடமேல் மாகாண முதலமைச்சர் சவால்

மீண்டும் ஒரு தேர்தல் நடைபெற்றால் அதற்கு நாம் தயாராக உள்ளோம். மக்கள் முன்னிலையில் செல்வதற்கு நாம் எப்போதும் தயாராக உள்ளோம் என வடமேல்மாகாண சபையின் முதல் அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் இணைந்து எனது மாகாண சபையில் பெரும்பான்மை அங்கத்தவர்கள் இருப்பதாக தெரிவிக்கின்றனர். ஆனால்அவர்கள் தமது பலத்தை நிரூபிக்க ஏன் தயங்குகின்றார்கள் என்பது தெரியவில்லை. எதிர்க்கட்சியினருக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகருக்கு மீண்டும் அமைச்சு அலுவலகம்

கொழும்பு நகரிலிருந்து கொழும்பின் புற நகர் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட அமைச்சு அலுவலகங்களை மீண்டும் கொழும்பு நகருக்கு கொண்டுவருமாறு ஜனாதிபதி டி பி. விஜயதுங்கா பணித்துள்ளார்.

புற நகர் பகுதிக்கு இவ்வாறு அமைச்சு அலுவலகங்கள் கொண்டு செல்லப்பட்டமையினால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் உயர் அதிகாரிகள், மற்றும் ஊழியர் தமது தொடர்ச்சியான கடமையைச் செய்யமுடியாத நிலையில் உள்ளனர் எனவும் எனவே மீண்டும் அமைச்சு அலுவலகங்களை கொழும்பு நகருக்குள் கொண்டுவருமாறும் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சு அலுவலகங்களின் பாதுகாப்பு கருதியே இவை புறநகர் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

### ப. நோ. கூ. சங்க செலவினத்திற்கு

## நிவாரணப்பணத்தில்வெட்டு நிறுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அதிகரித்து வரும் விலை

திரலிங்கம் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். (41)

... பாதை விவகாரம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன்பேச்சுக்களை நடாத்துவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## பிரேமா பிறந்த தினத்தன்று ஹேமாவின் கட்சி ஆரம்பம்

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாசாவின் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ள சுச்சரித்த மக்கள் முன்னணி தனது அங்குரார்ப்பணக் கூட்டத்தை பிரேமதாசாவின் பிறந்த தினமாகிய இம் மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்பொழுது கட்சியை அங்கீகரிக்குமாறு தேர்தல் ஆணையாளரைக்கோரும் மனுசமர்ப்பிப்பது தொடர்பாக ஆராய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது கட்சியின் கொடி, சின்னம் என்பனவற்றை தயாரிப்பதிலும் இக்கட்சியை ஆரம்பிப்பதில் பின்னணியில் இருந்து செயல்படுபவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எறிகணை வீச்சும் பீரங்கித் தாக்கும்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 5 00 மணியளவில் இராணுவத்தினர் தொண்டமானாறு குடியிருப்பு பகுதிகள் மீது பல ஆட்லறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும், ஆட்லறி ஷெல்கள் வெளிப்பகுதிகளில் விழுந்து வெடித்ததாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் கடலில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் நேற்று அதிகாலை மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

எனினும் மேற்குறித்த சம்பவங்களில் சேத விபரங்கள் ஏற்பட்டதாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளை காரைநகர் ஊரிமுனங்குத் துறையில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் அரண்களிலிருந்து பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவு 10. 20 மணியளவில் அகோர எறிகணை வீச்சினை மேற்கொண்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## உணவுப் பொருள்களுடன் நாளை 'குமாரி' வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்குசுமார் 3200 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களைஏற்றிக்கொண்டு குமாரி கப்பல் நேற்று கொழும்பில் இருந்து புறப்பட்டுள்ளது. குமாரி கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரிசி 1450மெற்றிக்தொன், சீனி 1000 மெற்றிக் தொன், மைசூர் பருப்பு 300 மெற்றிக் தொன், கோழித்தீன் 30 மெற்றிக்தொன், பயறு 30 மெற்றிக் தொன், றவை 50 மெற்றிக் தொன், பேக்கிங் பொருள்கள் 25 மெற்றிக் தொன்,வர்த்தகத் திணைக்களத்திற்கு உரிய பொதிகள் 165 மெற்றிக் தொன், யாழ். அரசாங்க செயலகத்துக்கு காகிதாகிகள் 05 மெற்றிக்தொன்,பாடசாலைப் பிள்ளைகளுக்குரிய புத்தகம் 65 மெற்றிக் தொன், தார், தேங்காய்எண்ணெய் என்பனவும் ஏற்றப்பட்டதாக நேற்று நண்பகல் கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த சில நாட்களாக மாவை இறக்கிய வாதுவ கப்பல் நேற்று திருக்கோணமலை நோக்கி புறப்பட்டது. [யோ], [நி], [க]

## மட்டுவில் வீடொன்றில் நகை, பணம் கொள்ளை

(தென்மராட்சி)

மட்டுவில் தெற்கு வாகையடியில் இரவுநேரத்தில் ஒரு வீட்டினுள் புகுந்த இனம் தெரியாத நபர்கள் பெறுமதி மிக்க நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக சாவகச்சேரி காவல் துறையினரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலியைச் சேர்ந்த கனகரட்ணம் சிவராஜா என்பவர் கோயில் திருவிழா ஒன்றிற்காக மட்டுவிலுள்ள தனது சகோதரியின் வீட்டிற்கு நகைகளைக் கொண்டு சென்று வைத்திருந்ததாகவும் அந்த நகைகளே கொள்ளையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (86)

---

பூநகரிப் பாதையை உணவு லொறிகளின் போக்குவரத்திற்கு திறந்துவிடுவது குறித்த பேச்சுக்கள் பிரேமதாசாவின் மரணத்துடன் தாமதமாகின. இதன் பின்னர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதி புதிய அரசாங்கத்துடன் இது குறித்து பேச்சுக்களை ஆரம்பித்தார். இப் பேச்சுவார்த்தைகளின்போது. புதிய அரசாங்கம் இப் பாதை திறப்பு விவகாரத்தில் அதிக அக்கறை காட்டியதாகவும் தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்தே அகதிகளுக்கான ஐ நா. பிரதிநிதி விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் வரவுள்ளார். செவ்வாய் மாலை இடம் பெறவுள்ள இப் பேச்சுவார்த்தையின்போது அரசாங்கம் பூநகரிப் பாதை திறப்பது குறித்து விதித்துள்ள நிபந்தனைகள் பற்றி பேச்சுக்கள் இடம்பெறும் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை, பூநகரிப் பாதையை உணவு லொறிகளின் போக்குவரத்திற்கு திறந்துவிட விடுதலைப்புலிகள் ஏற்கனவே இணங்கியிருந்தமை தெரிந்ததே.

# மணலாற்றுப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் பூர்த்தி

### சிறிலங்கா அரசு அறிவிப்பு

[கொழும்பு]

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களில் எச், எல் வலயங்களில் குடியேற்றங்கள் முடிவடைந்து விட்டதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. இதன்படி மணலாற்று பிரதேசத்தில் பெருமளவு சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுக்குப் பாதுகாப்பாக பெருமளவு இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குடியேற்றத்திட்டத்தின் கீழ் சிங்களக் குடியேற்றவாசிகளின் நலன்களைப்பேண 298 பாடசாலைகள், 166 சுகாதாரநிலையங்கள், 110 தபால் நிலையங்கள், 54 வங்கிகள், பாரிய வீதிகள் பல விகாரைகள் என்பன அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### அதிகாரம் இல்லை என உணர்ந்ததால்

# மாகாண சபையைத் தமிழர் முன்னரே நிராகரித்தனர்

### காமினி பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைக்கு எதுவித அதிகாரமும் இல்லை. அது ஆளுநரின் கட்டளைக்கு அமைவாகவே செயற்படவேண்டும் என தமிழர்கள் முன்னரே உணர்ந்துகொண்டதால் அவர்கள் அதனை நிராகரித்து விட்டனர். இன்று பெரும்பான்மையான சிங்கள மக்களினதும் விருப்பம் மாகாணசபை முறையை ஒழிக்கவேண்டும் என்பதே என சிறிலங்கா பாராளுமன்ற பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார்.

சிங்களப் பகுதிக்கு அதிகா

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

# அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவர முடிவு

### டி. பி. விஜயதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் அரசியல் அமைப்பு சட்டத்தில் திருத்தச்மொன்றை மேற் கொள்ள சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா ஆலோசனை செய்து வருவதாகவும்.ஆனால் அத்திருத்தம் என்ன என்பது குறித்துஅவர்வெளியிடவில்லை எனவும் ராவய பத்திரிகைஆசிரியர்விக்டர்ஐவன்தெரிவித்தார்.

இவ்வாறு திருத்தம் ஒன்று மேற்சொள்ளப்படவுள்ளதை ஒப்புக் கொண்டுள்ள டி. பி. விஜயதுங்கா அத்திருத்தம் என்ன என்பது குறித்து தெரிவிக்க மறுத்துவிட்டார் என ஐவன் தெரிவித்தார்.

இத் திருத்தச் சட்ட மூலத்தைத் கொண்டு வருவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவை பெறுவதே டி.பி விஜயதுங்காவிற்கு உள்ள பிரச்சினை என்றும்,

இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற முடியும் என ஜனாதிபதி நம்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

---

## அமைச்சு அலுவலகம்

கொழும்பு நகரிலிருந்து கொழும்பின் புற நகர் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட அமைச்சு அலுவலகங்களை மீண்டும் கொழும்பு நகருக்கு கொண்டுவருமாறு ஜனாதிபதி டி பி. விஜயதுங்கா பணித்துள்ளார்.

புற நகர் பகுதிக்கு இவ்வாறு அமைச்சு அலுவலகங்கள் கொண்டு செல்லப்பட்டமையினால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் உயர் அதிகாரிகள், மற்றும் ஊழியர் தமது தொடர்ச்சியான கடமையைச் செய்யமுடியாத நிலையில் உள்ளனர் எனவும் எனவே மீண்டும் அமைச்சு அலுவலகங்களை கொழும்பு நகருக்குள் கொண்டுவருமாறும் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சு அலுவலகங்களின் பாதுகாப்பு கருதியே இவை புறநகர் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

### ப. நோ. கூ. சங்க செலவினத்திற்கு

## நிவாரணப்பணத்தில்வெட்டு நிறுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான வாராந்த நிவாரணத்தில் ப. நோ. கூ. சங்கங்களின் செலவினங்களுக்கு என்று குறிப்பிட்ட அளவு பணம் வெட்டப்படுவதை நிறுத்தி அத்தொகையை சிறிலங்கா அரசே வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகள் யாழ். அரச அதிபரைக் கேட்டுள்ளன.

இவ்வாறு இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் காலை யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளனர்.

அதிகரித்து வரும் விலைவாசிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இடம்பெயர்ந்தவர்களின் இன்னல்கள் அரச அதிபரிடம் கூறப்பட்டன.

இது பற்றி யாழ். அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்; தாம் இதுபற்றி முன்கூட்டியே அரசிடம் கோரிக்கை விடுத்திருந்ததாகவும், ஆனால் புனர்வாழ்வு அமைச்சு இது சம்பந்தமாக எந்தவித சாதகமான பதிலையும் அளிக்கவில்லை என்றார். மேலும், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தியாகி சிவகுமாரன் நினைவு நேற்று அனுஷ்டிப்பு

"தியாகி சிவகுமாரன் காலத்தில் ஆரம்பித்த விடுதலைப் போராட்டம் இன்னமும் தொடர்கிறது. அன்று சின்னஞ் சிறிய பொறியாக இருந்த இப்போராட்டம் இன்று ஊழித் தீயாக உருவெடுத்து நிற்கிறது. எமது மண்ணையும் மக்களையும் அழிக்கவந்த சிங்கள இனவெறியர்களையும் இந்திய வல்லாதிக்கத்தினரையும் எரித்து சாம்பலாக்கிய வண்ணம் எழுந்து நிற்கிறது" என்று உரும்பராய் சிவகுமாரன் நினைவாலய முன்றலில் நடைபெற்ற சிவகுமாரனது 19ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. தேவர் கூறினார். கோப்பாய் வட்டப் பொறுப்பாளர் திரு. தம்பி அண்ணா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையின் யாழ் மாவட்ட துணைப் பொறுப்பாளர் திரு. இளையவன், விடுதலைப் புலிகளின் மகளிர்

(4ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக்கழக

## நுண்கலைப் பீடத்தில் நாட்டிய, இசை பட்டப்படிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் இராமநாதன். நுண்கலைப் பிரிவில் இசைமாணி, நாட்டியமாணி, கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இக்கற்கை நெறிக்கான அனுமதியைப் பல்கலைக்கழகமானியங்கள் குழு 1992 மே மாதத்தில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி பட்டப் படிப்புகளுக்கான அனுமதி விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன. கர்நாடக இசை. வாய்ப்பாட்டு, பண்ணிசை, பரதநாட்டியம், கர்நாடக இசை-வாத்தியங்கள்-வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய கற்கை நெறிகள் இப் பட்டப் படிப்பு கற்பித்தலில் இடம்பெறவுள்ளன.

க. பொ. த. (உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லதுஇரண்டும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


## EXODUS

தாயகம் நோக்கிய பயணம் எழுகியது லியோன் யூரிஸ் (EXODUS By LEON URIS) தமிழாக்கம் இரண்டு பாகங்கள் விலை ரூபா 400/-. வெளியீடு: ஈழநாதம். கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
(சி-6779)

## உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள் றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6733)

## தவறிவிட்டது

3.06.93 அன்று கைகடி விநாயகர் கோவிலடியில் சில உடுப்புகளும், பிறந்தநாள் வீடியோ கொப்பியும் அடங்கிய பாக் (நீலம்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(5040)

## காணவில்லை

புலோலி கிழக்கு தச்சன் கலட்டியைச் சேர்ந்த திருமதி கே. யோகவதி என்பவரின் ஜே. சி இனமாடு. கடந்த 23.4.93லிருந்துகாணவில்லை.
வயிற்றில் வெள்ளைப் புள்ளியுடைய, வளைந்த பெரிய கொம்புகள் கொண்ட, S.A. குறியீடு இடப்பட்டுள்ள இம்மாட்டைக் காண்பவர்கள் மேல் குறித்த விலாசத்திற்கு அறிவிக்கவும். (சி-6781)


## நிலக்கடலையில் புதுவித நோய்

[தொல்புரம்]

வலிமேற்குப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலைப் பயிர்களில் புதுவித நோய் ஒன்று பரவி வருகிறது.

இப்புதுவித நோயினால் பயிர்கள் பாதிப்படைந்ததின் காரணமாகவிவசாய ஆராய்ச்சிப்பகுதியுடன் விவசாயிகள் தொடர்பு கொண்டதையடுத்து பாதிக்கப்பட்ட நிலக்கடலைப் பயிர்களின் மாதிரி விவசாய திணைக்களத்தின்

# ஈழத்து கலை வளர்ச்சி இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்த மருத்துவக் கண்காட்சியின் இறுதிநாளான இன்று திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் 'ஈழத்து கலை வளர்ச்சி' எனும் பொருள்பற்றி கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் நாடகக் கலைகள் பற்றி திரு கே சிதம்பரநாதனும் நாட்டார்கலைகள் பற்றி பேராசிரியர் அ. சண்முகதாசும் ஓவியம் சிற்பம் பற்றி திரு. ஆ. க. நடராசாவும் இசைக்கலை பற்றி திரு. என் சண்முகலிங்கனும் புகைப்படகலைபற்றி திரு சசி கிருஷ்ணமூர்த்தியும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து பிற்பகல் 5.00 மணிக்கு பரிசளிப்பு வைபவம் நடைபெறவுள்ளது பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் யாழ் மாவட்ட அரச அதிபரும் ஆணையாளருமான திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களின் உரையை தொடர்ந்து பரிசளிப்பு நடைபெறும் அதை அடுத்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா நிறைவுரையையும் சம்மேளனத்தின் தலைவர் திரு. தகணநாதன் நன்றியுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

இராமநாதன் நுண்கலைக் கழகம்

இசைகலைமணி / நாட்டியக்கலைமணி டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பயிலுவதற்கான

**அனுமதி 1992/93**

மேற்குறித்த பயிற்சி நெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படவுள்ளன.

தகைமைகள்:

1) விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடகசங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கர்நாடகசங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்திபெறாத

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இராமநாதன் நுண்கலைக்கழகம்

இ[illegible]மாணி, நாட்டியமாணி பல்கலைக்கழக அனுமதி 1992/93

மேற்படி பட்டப்படிப்புகளுக்கான அனுமதி என்னால் யூன் மாதம் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பின்வரும் கற்கை நெறிகளில் கற்பித்தல் இடம்பெறும்.

1. கருநாடக இசை—வாய்ப்பாட்டு
2. பண்ணிசை
3. பரதநாட்டியம்
4. கருநாடக இசை - வாத்தியங்கள் - வயலின், வீணை
5. மிருதங்கம்

அனுமதிக்கான நிபந்தனைகள்

1. க. பொ. த (உயர்தரம்) ஒரேமுறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்பட நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. க. பொ. த (உயர்தரம்) ஒரேமுறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது


மாகாணசபைகளுக்கு

# பொலிஸ்துறை அதிகாரம் இன்னமும் அமுல் இல்லை

மாகாண சபைகளுக்கு பொலிஸ்துறை தொடர்பாக அதிகாரம் வழங்க 1990 ஜனவரியில் கொண்டுவரப்பட்ட சட்டம் இன்னமும் அமுல் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சட்டத்தின்படி பொலிஸ் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுங்குகட்டுப்பாடு என்பவற்றை மாகாண சபை கையாள முடியும்.


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்துடன் இணைந்து இயங்குகின்ற சந்தோசம் பாலர் பாடசாலை அபிவிருத்தி நிதிக்காக06.06-93. இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, இம் மாதம் 5ஆம் திகதி, 33 ஆவது ஆண்டு விழா 04. 06. 93 ஆம் திகதி நடைபெற்ற காரணத்தினாலும் வேறுசில தவிர்க்க முடியாத காரணங்களினாலும் 11.07.93 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

இப்படிக்கு
நிர்வாகிகள்
அரியாலை அருணோதயா ச. ச. நிலையம்
[5041]

## சிறந்த புரதச்சத்து நிறைந்த சோயா பானத்தை தயாரிக்க வல்லது

# -சோயாரீன்-




இது கோப்பி போன்று பாலுடன் பாவிக்கக் கூடியது.

அண்ணா கோப்பிக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா கோப்பிக் கடை**

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
[சி/6780]

## நாங்கள் உங்களை அண்மித்துவிட்டோம்

## முக்கிய அறிவித்தல்

தரம்! நாணயம்! நம்பிக்கை! நிறைந்த

# புனிதா நகை மாளிகை

04. 06. 93 முதல்

239, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மாற்றம் செய்துள்ளோம். அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு அறியப்படுத்தவும்.

– உரிமையாளர்.

(5024)

# கொழும்பு ஸ்ரூடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (BLOCKS)-பழைய படங்களிலிருந்து-அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான பார்சில் - ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**கொழும்பு ஸ்ரூடியோ**

55, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-6748)


# நினைவு கூருகின்றோம் ...

## 1993-06-06

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - கந்தளாய்ப் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 23 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு திருமலையில் பேரூந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சீனன்வாடிப் பகுதியில் வைத்து சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன 6 வயதுக் குழந்தை உட்பட 9 தமிழர்கள்.

பலாலி இராணுவ முகாமுக்கு அடகுநகை எடுக்கப் போனபோது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ். அச்சுவேலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். மார்க்கண்டு [கந்தையா கனகரத்தினம் - முழங்காவில், பூநகரி - மன்னார்]

லெப். பவான் (கந்தையா நவநீதி - ரூபதநிதி வீதி, அச்சுவேலி தெற்கு - யாழ்.)

லெப். ரகு (இராசதுரை ரகு - 36/4, இராமநாதன் வீதி - யாழ்.)

2-ம் லெப். அச்சுதன் (ஈஸ்வரலிங்கம் குமாரலிங்கம் - நெடியகாடு, வல்வெட்டித்துறை - யாழ்.)

குமணன் (சதாசிவம் ரங்கநாதன் - அம்பனை, அளவெட்டி - யாழ்.)

யுடைய, வளர்ந்த மேனி கொம்புக் கொண்ட, S.A. குறியீடு இடப்பட்டுள்ள இம் மாட்டைக் காண்பவர்கள் மேல் குறித்த விலாசத்திற்கு அறிவிக்கவும். (சி-6781)

## நிலக்கடலையில் புதுவித நோய்

[தொல்புரம்]

வலிமேற்குப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலைப் பயிர்களில் புதுவித நோய் ஒன்று பரவி வருகிறது.

இப்புதுவித நோயினால் பயிர்கள் பாதிப்படைந்ததின் காரணமாகவிவசாய ஆராய்ச்சிப்பகுதியுடன் விவசாயிகள் தொடர்பு கொண்டதையடுத்து பாதிக்கப்பட்ட நிலக்கடலைப் பயிர்களின் மாதிரி விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (41)

## கூட்டுறவாளர் தினம் விழாவுக்கு ஏற்பாடு

(தால்புரம்)

1993ஆம் ஆண்டிற்கான சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி எதிர்வரும் யூலை மாத முதல் வாரத்தில் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் கூட்டுறவுத் தின விழா நடாத்தப் படவுள்ளது.

மேற்படி விழாவில் யாழ். மாவட்டத்தில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளை நடாத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (41). (22)


ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின்

**உலவுப் பார்சல்கள்**

**காலை 11.30 மணி முதல் பகல் 3.00 மணி வரை கிடைக்கும்.**

**மீன் / இறைச்சி ரூபா 30/-**

**மரக்கறி ரூபா25/-**

மாணவர்களுக்கு விசேட சலுகை

எல்லாவிதமான உணவு ஓடர்களும் கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளிமகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி

(சி-6718)


## அனுமதி 1992/93

மேற்குறித்த பயிற்சி நெறியினைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

**தகைமைகள்:**

1) விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரேதடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடகசங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கர்நாடகசங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்திபெறாதவர்கள் வடஇலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4 இல் சித்திபெற்றிருப்பதுடன் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

2) விண்ணப்பதாரி 30-06-1993 அன்று 15 வயதிற்குமேற்பட்டவராகவும் 25 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும்.

28-05-1993 இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவுமுடையவராக இருத்தலவேண்டும். மேற்கூறப்பட்ட வைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிபற்றிய விபரங்களும், விண்ணப்பப்பத்திரமும யாழ் பல்கலைக்கழகத்தில சிறாப்பரின் கரும பீடத்தில் ரூபா 20/- செலுத்தி அல்லது நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு ரூபா 20/-க்கான காசுக்கட்டளை ஒன்றினைப் பெற்று அத்துடன் உங்கள் சொந்த முகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய கடித உறை ஒன்றினை அனுப்புவதன் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள்அனுப்ப வேண்டிய கடைசித்திகதி 30-06-1993

- பதிவாளர்

(சி-6774)

2. பண்ணிசை
3. பரதநாட்டியம்
4. கருநாடக இசை - வாத்தியங்கள் - வயலின், வீணை
5. மிருதங்கம்

அனுமதிக்கான நிபந்தனைகள்

1. க. பொ. த (உயர்தரம்) ஒரேமுறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்பட நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. க. பொ. த (உயர்தரம்) ஒரேமுறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இரண்டும் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்று நான்காவது பாடத்தில் 25 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றுடன் நான்கு பாடங்களிலும் மொத்தமாக 180 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். 1990/91 க. பொ த. (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் அனுமதிக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

பல்கலைக்கழக மூதவையினால் ஆற்றுகைக் கலையில் அங்கீகரிக்கப்பட்ட பிறதகைமைகளும் பரிசீலிக்கப்படும்.

அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சையில் தகுதிபெறல் வேண்டும்.

பல்கலைக்கழகப் பரீட்சைகள் உதவிப்பதிவாளரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவங்களில் மட்டுமே அனுமதி கோரலை நிரப்பி அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துக்கும் ரூபா 20/- செலுத்துதல் வேண்டும். தபால் மூலமாக விண்ணப்பப் படிவங்களை பெற விரும்புவோர் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையும் சுயவிலாசமிடப்பட்ட 23x10 செ மீ. அளவிலான கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

— பதிவாளர்.

(சி-6773)





அண்ணா கோப்பிக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா கோப்பிக் கடை**

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

[சி/6780]



## நாங்கள் உங்களை அண்மித்துவிட்டோம்

உங்களுக்குத் தாமதம் இன்றி உடனடிச் சேவையை வழங்கவும் மேலும் சிறந்த சேவையை அளிக்கும் முகமாகவும், பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுதலிற்கு இணங்கவும் நாங்கள் கந்தர்மடத்திலிருந்து இல. 7, குமாரசாமி வீதி, செந்தாமரையில் எங்களது தரமான, சுவையான உணவுப் பார்சல்களை வழங்க-

**ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா** தீர்மானித்துள்ளது.

உங்களது TAKE AWAY பார்சல்கள் மற்றும் ஓடர்களுக்கும் மேலே குறிப்பிட்ட முகவரை நாடுங்கள்.

உணவுப்பார்சல்களை முற்பகல் 11 30 மணிமுதல் பிற்பகல் 3 00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

★ பதிவுகள் முன்கூட்டியே ஏற்கப்படும்.

ஜோ. எகட்டனின் **ஜெசித்தாரா,**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உருவம் ஜெசித்தாரா (சி-6750)


## 7-ம் ஆண்டு இதயஅஞ்சலி

தாயின் மடியில்:

28. 5. 1965

தாயக மண்ணில்:

7. 6. 1986



(கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரச்சாவடைந்தார்.)

**வீரவேங்கை தீசன்**

[சின்னத்துரை மனோகரன்]

- என்றும் உன் பிரிவால் வாடும் அன்பான அப்பா, அம்மா, அக்கா, அத்தான், பிருந்தா (மருமகள்) அண்ணாமார், தம்பி, தங்கைகள், நண்பர்கள்.

"பூம்புகார்" மலலாகம். (5035)

தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு திருமலையில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சினன்வாடிப் பகுதியில் வைத்து சிறிலங்காப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன 6 வயதுக் குழந்தை உட்பட 9 தமிழர்கள்.

பலாலி இராணுவ முகாமுக்கு அடகுநகை எடுக்கப் போனபோது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ். அச்சுவேலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். மார்க்கண்டு [கந்தையா கனகரத்தினம் - முழங்காவில், பூநகரி - மன்னார்]

லெப். பவான் (கந்தையா நவநீதி - சூ.பதநிதி வீதி, அச்சுவேலி தெற்கு - யாழ்.)

லெப். ரகு (இராசதுரை ரகு - 36/4, இராமநாதன் வீதி - யாழ்.)

2-ம் லெப். அச்சுதன் (ஈஸ்வரலிங்கம் குமாரலிங்கம் - நெடியகாடு, வல்வெட்டித்துறை - யாழ்.)

குமணன் (சதாசிவம் ரங்கநாதன் - அம்பனை, அளவெட்டி - யாழ்.)

நீதவான் (நடராசா சிறிஸ்கந்தராசா - தெக்கமாத்தடி நவாலி வடக்கு, மானிப்பாய் - யாழ்.)

பூபன் (தங்கையா சத்திவேல். ஜீவன் வீதி, 2-ம் குறுக்குத் தெரு, குருநகர் - யாழ்.)

யாழ் - கொல்லன்கலட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

லவன் (சந்திரசேகரம் லவக்குமார் - லவக்குமார் வீதி, அரியாலை - யாழ்)

யாழ். கோட்டைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மின்சார விபத்தில் எமைப் பிரிந்த -

மோகன் (சின்னத்துரை யோகேந்திரன் - தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்.)

இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட 8 பெண்கள் உட்பட 25 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு நகரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பகுதி பிரஜைகள் குழுத் தலைவர்.

1989ஆம் ஆண்டு யாழ். பருத்தித்துறை, தம்பசிட்டிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ராஜன்/விசு (ஏரம்பமூர்த்தி விநாயகமூர்த்தி - வீ. எம். வீதி, பருத்தித்துறை - யாழ்.)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

கிருபா (நடராசா கிருபாகரன் - பத்திரகாளி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை - யாழ்)

1991ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

துஷ்யந்தன் (ச. பாஸ்கரன் - புதுக்குடியிருப்பு - மட்டு-)

மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

றேணு (கறுப்பையா விஜயரட்ணம் - 155, கடற்கரை வீதி - யாழ்.)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6776)

சிந்தனைக்கு

நம்மிடமுள்ள குறைபாடுகளையும் பொருட்படுத்தாது - நம்மிடம் அன்பு பாராட்டுகிறார்கள் என்கிற நம்பிக்கையே மிக உன்னதமான இன்பமாய் ஆகி விடுகிறது.

- விக்டர் ஹ்யூகோ


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## வருடாந்த சடங்கும் சம்பிரதாய அறிவிப்பும்

வருடா வருடம் சித்திரை மாத ஆரம்பத்தில் புதுவருடப் பிறப்பிற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவது போன்று யூன் மாதத்தில் சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இடம்பெறுவதுமுன்னிட்டுபலஏற்பாடுகள் இடம்பெறுவதுண்டு. பண்டிகைக்கு உடுபுடைவைகள், உணவுப் பதார்த்தங்கள் பற்றிப் பேசப்படுவது போன்று இம்மாநாட்டிற்கு முன்னதாக மனித உரிமைகள் பற்றியும், ஜனநாயகம் பற்றியும்அதிகம் பேசப்படுவதுண்டு.

இந்தவகையில் இவ்வருட போனசாக வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அவசர காலச் சட்டத்தை நீக்குவது குறித்து சிறிலங்கா அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அறிவிதத்துள்ளது சிறிலங்காவின் நிலைஇவ்வாறாகஇருக்க உதவி வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் இவை குறித்துப் பேசுவதுண்டு. அவர்கள் அரசின் மனித உரிமை மீறல்கள், ஜனநாயக மீறல்கள் குறித்து கண்டனங்களையும், கட்டுப்பாடுகளையும் அறிவிக்கும் அதேவேளை கடந்த வருடத்திற்கும் இவ்வருடத்திற்கும் இடையிலான முன்னேற்றமும் குறித்துப் பேசிக் கொள்வர்.

ஆனால், இதுவரை இடம்பெற்றுவரும் உதவி வழங்குவோர் மாநாட்டில் சிறிலங்காவிற்கான உதவியில் வெட்டு வீழ்ந்ததாக இல்லை. 1988, 1989ஆம் ஆண்டில் பெரும் படுகொலைக் களமாகச் சிறிலங்கா விளங்கிய போதிலும்சரி. 1990, 1991, 1992 இல் இனப்படுகொலைகள் நிகழ்ந்த போதிலும் சரி சிறிலங்காவிற்கான உதவி குறையவில்லை. மாறாக அதிகரித்து வந்துள்ளது.

அவ்வாறானால், உண்மை நிலை என்ன? இவர்கள் பேசிக் கொள்வதுதான் என்ன? உண்மையில், இவர்கள் பேசிக் கொள்வது மேலேகுறிப்பிட்ட பிரச்சினைகளும் அல்ல, அவற்றிற்கான தீர்வுகளும் அல்ல. அவர்கள் பேசிக் கொள்வது வெளிநாட்டு மூலதனத்திற்கான பாதுகாப்புப் பற்றியதும், உதவி செய்யும்நாடுகளுக்கும் நிறுவனங்

# இந்திய ராணுவத்தின் உறுதியில் தளர்வு

# உள்நாட்டு போர்களில் சிக்கியதன் விளைவு

இது சௌத் பிளாக்கே அமளி துமளிப்பட வேண்டிய நேரம். புதிதாக யுத்தமோ, கலகமோ ஒன்றும் வெடித்து விடவில்லை. ஆனால், இந்தியாவின் வியூக மூளைகளும், ராணுவ உயரதிகாரிகளும் ஒரு கடுமையான, கசப்பான, சற்று அச்சுறுத்தலான நிதர்சனம் கண்டு உஷாராயிருக்கிறார்கள். பட்ஜெட் குறைப்பினால் பண பற்றாக்குறை, தள்ளாட்டம், முன்னாள் சோவியத் யூனியனின் ஆயுத சப்ளை அடியோடு நின்றதால் நிலை குலைவு; உள்நாட்டில் அமைதி காக்க கிளம்பி ஓய்ந்துபோய் கிடப்பது இவற்றால் பாகிஸ்தான் ராணுவத்தைவிட சிறந்தது என்கிற நிலையை இந்திய ராணுவம் இழந்து வருகிறது. ராணுவ உயரதிகாரிகளும், பாதுகாப்பு அமைச்சரகத்தின் அதிகாரிகளும் நடத்திய உயர்நிலைக் கூட்டங்களில் செலவுகளைக் குறைப்பது என்கிற பீதி எல்லையின் நடவடிக்கைகள் குறித்தும் முன்னாள் சோவியத் குடியரசிடமிருந்து குறைந்தபட்சம் உதிரிப் பாகங்களும், வெடிமருந்துகளுமாவது வாங்கலாம் என்பது குறித்தும் முடிவெடுத்திருக்கிறார்கள். ஆனால் உள்நாட்டு அரசியலிலும் பொருளாதாரத்திலும் புரையோடிப்போயிருக்கும் வியாதிக்கு இந்த நடவடிக்கைகள் போதாது.

நெஞ்சை நிமிர்த்திக் கொண்ட காலம் ஒன்று இருந்தது. டைம் பத்திரிகை அட்டையில் இந்தியாவைப் புதிய பிராந்திய வல்லரசு என்று அழைத்தது இதை ராஜீவ் அரசின் ''மேரா பாரத் மஹான்' நிகழ்ச்சி ஐந்து கோடி டெலிவிஷன்களில் எதிரொலித்தது.இதெல்லாம் இப்போது யாருக்கும் நினைவில்லை. மந்திரம் பட்டது போன்ற நாட்கள் அவை. அதிநவீன கடற்படை; வான்வெளித் தாக்குதல் பிரிவு;ஏர்-லேண்ட் பேட்டில் 2000; ஆர்மி பிளான் 2000; ரேபிட்ஸ்; பயிற்சி சாகசங்கள் இலங்கையிலும், மாலைதீவிலும் நமது ராணுவம் தலையிட்டது. 80—களின் தாரக மந்திரமாக நம்மிடம் மிரட்டி வைக்கும் பலம் இருந்தது. ராஜீவ் ஆட்சியிலிருந்த ஐந்து

விட்டு விடும் நிலைக்கு வந்திருக்கிறது.

தொல்லை தரும் பக்கத்து நாட்டிடம் நான் உன்னைவிட பலசாலி என்று இந்தியா முஷ்டியை உயர்த்த அந்த இயந்திரத்திற்கு இப்போது வலுவில்லை.

கடந்த ஐந்து பட்ஜெட்டுகளிலும் ராணுவச் செலவினைக் குறைத்தது முப்படைகளுக்கும் பேரிடி தந்தது; சோவியத் ஆயுதசப்ளைநின்றுபோனது; உள்நாட்டுக் கலவரத்தை அடக்க ராணுவத்தை அதிகமாகப் பயன்படுத்துவது ஆகியவை உலகிலேயே நான்காவது பெரிய ராணுவம் என்று இன்னும் ஏட்டளவில் இருக்கும் ராணுவத்தைக் கடந்த 30 வருடங்களில் காணாத அளவுக்கு நோஞ்சானாக்கியுள்ளது.

குறிப்பாகப் பாகிஸ்தானுடன் நீண்ட நாள் போர் நடத்த வேண்டி இருக்கும் என்ற நிலையில் இந்தியா தாக்குப் பிடித்துப் போரிடும் சக்தியுடன் இருக்க வேண்டும். ஆனால், முப்படைகளிடமும் மாற்றுத் தளபாடக் கையிருப்பு முன்னெப்போதையும் விட மிகக் குறைவாகி விட்டது. டாங்கி ரெஜிமெண்டில் சில வருடங்களுக்கு முன்பு வரை 65 டாங்கிகள் இருந்தன. இப்போது அந்த எண்ணிக்கை 55 ஆகக் குறைந்திருக்கிறது. இதனால் யுத்தத்தின் இரண்டாம் நாளிலேயே கூட கவசப் படைகளை முழு பலத்தில் நிறுத்த முடியாமல் போகலாம். விமானப் படையிலும் இதே நிலைமைதான்.

2000-ம் வருடத்தில் 80 கவசப்படை ரெஜிமெண்டுகளை உருவாக்குவது, அனைத்து தரைப்படை பட்டாலியன்களையும் இயந்திரமயமாக்குவது என்று சுந்தர்ஜி திட்டமிட்டார். இப்போது 59 கவசப்படை ரெஜிமெண்டுகள் இருக்கின்றன. பாகிஸ்தானின் ஸ்கோர் 39. இதே மாதிரி விமானப் படையின் நவீனமாக்கல் திட்டமும் கலகலத்துப் பாய்விட்டது. 47 ஸ்க்வாட்ரன்களிலிருந்த விமானங்களை நவீனமயமாக்கியிருக்க வேண்டும். ஆனால் ஸ்க்வாட்

சமீபத்திய பட்ஜெட்டில் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையும் அபாய அறிகுறி காட்டுகிறது.கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட ரூ 17,500 கோடியைவிட இந்தவருடம் 9 சதவீதம் அதிகமாக ரூ. 19,810 கோடி ஒதுக்கியும் அதிகாரபூர்வ பணவீக்க விகிதத்தில் 7 சதவீதத்தைத்தான் இது சரிக்கட்டுகிறது.

முப்படைகளுக்குமான திட்டப்பணிகள் 8 வருடங்களாக நடக்கவில்லை என்று உயர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 1989-ல் எடுத்த ஒரு சர்வேயின்படி ராணுவத்தில் ஆயுதங்கள் வெடிமருந்துகளுக்கான பற்றாக்குறையே ரூ. 11000 கோடியாக இருக்கிறது ''வீட்டு வசதிக்காகத் தேவைப்படும் ரூ 8,500 கோடியைக் கூட நான் கணக்கிடவில்லை'' என்றார் ஓர் உயரதிகாரி.

இப்படி நிதி ஆதாரங்கள் குறைவதால் ராணுவம் விழுந்தடித்துக் கொண்டு நடவடிக்கைகளை எடுக்கிறது; விரிவாக்கம் மற்றும் நவீனமாக்கலை முடக்குவது; வெடிமருந்து இருப்பைக் குறைப்பது; நம் நாட்டின் ப்ருத்வி( தரையில்இருந்துதரை இலக்கு தாக்கும்), நாக் (டாங்கி எதிர்ப்பு) போன்ற ஏவுகணை முயற்சிகள் வெற்றி

> இந்தியா டுடே இதழின் ஏப்ரல் 21 – மே 5 திகதியவெளியீட்டில் ''பாதுகாப்பு அரணில் உடைப்புகள்'' என்ற தலையங்கத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டுரையின் முக்கிய பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

பெற்றும் அவற்றை வாங்க பணவசதி இல்லை. முன்னணி போர் விமானங்கள் புதிது புதிதாக வருகிற இந்தக் காலகட்டத்தில்சமீபத்தியதொழில்

ஏற்பட்டிருப்பதை உறுதி செய்கின்றன. போபர்ஸ் பீரங்கிகளுக்கு வெடிமருந்துகள் வாங்குவதற்காக 40-லிருந்து 50 கோடி ரூபாயைப் பெற இராணுவதளபதி எஸ்.எஃப் ரோட்ரிக்ஸ் பல மாதங்கள் அரசிடம் போராடினார். ஒரு வழியாக பணத்தைப் பெற்று ஐரோப்பாவிற்குச் சென்றால் அங்கே ஸ்டாக் இல்லை.

கப்பற்படை ரோந்து வருவதை குறைத்திருக்கிறது. விமானப்படையோ பறக்கும் நேரத்திற்குக் கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. ''ஒரு ஸ்க்வாட்ரனுக்கான பைலட்டுகளின் எண்ணிக்கையை குறைத்து அவர்களுக்கு தரை வேலைகளைத் தந்திருக்கிறோம்'' என்கிறார் வாயு பவனைச் சேர்ந்த ஓர் அதிகாரி. இதனால் பாகிஸ்தான் விமானப்படையோடு ஒப்பிடும்போது இந்திய விமானப்படையில் ஒரு ஸ்க்வாட்ரனில் 50சதவீத பைலட்டுக்கள் குறைவாக இருக்கிறார்கள். யுத்த காலத்தில் பைலட்டுகள் கிடைப்பதைப் பொறுத்துதான் சேதமான விமானங்களை சரி செய்து மீண்டும் இயக்க முடியும் ஆனால் ஒரு பைலட் எத்தனை என்று சமாளிக்க முடியும்?

பண்டமாற்று மூலமாகவோ அல்லது பணத்திற்கோ நம்பகமாக ஆயுதங்கள் சப்ளை செய்து வந்த சோவியத் யூனியன் உடைந்து போனதில் பண நெருக்கடியை மிகவும் மோசமாக்கி இருக்கிறது. ஆனால் நிஜமான பிரச்சினை கைவசம் இருக்கும் சோவியத் தளபாடங்கள். ஆயுதங்களைப் பராமரிப்பதுதான். ரஷ்யர்கள் உதவ விரும்பினாலும் இப்போது தொழிற்சாலைகள் அவர்கள் கையில் இல்லை. முன்னைய சோவியத் யூனியனின் ராணுவ தொழிற்சாலைகள் இப்போது பல குடியரசுகளிலும் பரவிக் கிடக்கின்றன. உதாரணமாக, இந்திய விமானப்படை பயன்படுத்தும் போக்குவரத்து விமானங்களுக்கான கட்டுமானம் இப்போது உக்ரைனிலிருக்கிறது. ரஷ்யாவில் இல்லை. இதனால் உதிரி பாகங்கள், மற்ற கருவிகளை இந்தப் புதிய குடியரசுகளிடமிருந்து பெறுவது

முன்னாள் ராணுவதுணைத் தலைவர் வி.கே ஸூத் சென்ற ஆண்டு நேசனல் டிபெண்ஸ் காலேஜில் அதிகாரிகளிடையே உரையாற்றியபோது 80 சதவீத ராணுவ வீரர்கள் உஷார் நிலையில் உள்ளதாக குறிப்பிட்டார். இது மிகவும் அவலமான நிலைமை பஞ்சாப், காஷ்மீர், வடகிழக்குப் பிரதேசம் ஆகிய இடங்களில் மட்டும் 40 சதவீத ராணுவத்தினர் எப்போதும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக தோராயமான மதிப்பீடுஒன்று தெரிவிக்கிறது ராணுவத்தின் மீது அதிக பளு ஏற்பட்டுள்ளதாக ராணுவ தலைவர் ஜெனரால் எஸ்.எஃப் ரோட்ரிக்ஸ் சமீபத்தில் பாதுகாப்புப்படைகளின் அதிகாரபூர்வ பத்திரிகையான சைனிக் சமாச்சாருக்கு அளித்த பேட்டியில் ஒப்புக்கொண்டார்.

''உள்நாட்டுப் பாதுகாப்பு பிரச்சினை இல்லாவிட்டால் ராணுவ பட்ஜெட்டில் 10—15 %. வரைமிச்சமாகும்'' என்கிறார் லெப்.ஜெனரல் (ஓய்வு) கே.கே.ஹசாரி.

தொடர்ந்து உள்நாட்டுப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதால் தனிநபர் பயிற்சியும் கெடுகிறது. விடுமுறை எடுக்க முடிவதில்லை; அதிருப்தி வளர்கிறது.

இந்திய ராணுவம் ஒன்றுதான் போர் இல்லாத போதும் பிஸியாக இருக்கிறது. உள்நாட்டிலும், இலங்கையிலுமாக கடந்த பத்து ஆண்டுகளில் 10,000 ராணுவ வீரர்கள் பலியாகி இருக்கிறார்கள். இதன் விளைவாக துப்பாக்கிப்படையின் பெரும்பாலான பிரிவுகள் ஒய்ந்து போயுள்ளன.

இந்தியாவின் தயார் நிலை மோசமாக இருப்பதால் எதிரிகள் நம்மை சீண்டுவதற்குத் துணியக் கூடும் என்று அனலிஸ்ட்கள் அஞ்சுகிறார்கள். காஷ்மீரில் பாகிஸ்தான் சிறிய அளவில் யுத்தம் செய்து

யும் அறிவிக்கும் அதேவேளை கடந்த வருடத்திற்கும் இவ்வருடத்திற்கும் இடையிலான முன்னேற்றமும் குறித்துப் பேசிக் கொள்வர்.

ஆனால், இதுவரை இடம்பெற்றுவரும் உதவி வழங்குவோர் மாநாட்டில் சிறிலங்காவிற்கான உதவியில் வெட்டு வீழ்ந்ததாக இல்லை. 1988, 1989 ஆம் ஆண்டில் பெரும் படுகொலைக் களமாகச் சிறிலங்கா விளங்கிய போதிலும்சரி. 1990, 1991, 1992 இல் இனப்படுகொலைகள் நிகழ்ந்த போதிலும் சரி சிறிலங்காவிற்கான உதவி குறையவில்லை. மாறாக அதிகரித்து வந்துள்ளது.

அவ்வாறானால், உண்மை நிலை என்ன? இவர்கள் பேசிக் கொள்வதுதான் என்ன? உண்மையில், இவர்கள் பேசிக் கொள்வது மேலேகுறிப்பிட்ட பிரச்சினைகளும் அல்ல. அவற்றிற்கான தீர்வுகளும் அல்ல. அவர்கள் பேசிக் கொள்வது வெளிநாட்டு மூலதனத்திற்கான பாதுகாப்புப் பற்றியதும், உதவி செய்யும்நாடுகளுக்கும், நிறுவனங்களுக்கும் கிடைக்கும் லாபம் பற்றியதும் ஆகும்.

பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் உதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இவை குறித்துப் பெரிய பிரச்சினை எதுவும் இருக்கவில்லை. படுகொலைகள் மத்தியிலும் அரசாங்கம் பலமாக இருந்ததோடு, உதவி வழங்கும் நாடுகளின் விருப்பு வெறுப்புக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன. பிரேமதாசா காலத்தில் ஆசியாவிலேயே தனியார் மயமாக்கலில் சிறிலங்கா முன்னணிவகித்தமை இதற்குசிறப்பான உதாரணமாகும்.

இந்த வரிசையில் சிறிலங்காவுடன் உதவி வழங்குவோர் இவ்வருடம் பேசிக் கொள்ளும் முக்கிய விடயம் ஸ்திரணமான ஆட்சி. கடந்த வருடங்களைப் போன்று சிறந்த பொருளாதாரக் கொள்கை, மற்றும் தனியார் மயமாக்கலுக்கான ஊக்குவிப்பு என்பவை பற்றியே ஆகும்.

இவ்விடயங்கள் இவ்வருடத்தில் முக்கியம் பெறுவதற்குக் காரணம் பிரேமதாசாவின் மரணமும், அதனை தொடர்ந்து சிறிலங்கா அரசியலில் ஏற்பட்டுள்ள ஸ்தீரணமற்ற தன்மையும் ஆகும். அண்மையில் உதவி வழங்கும் மேற்கு நாட்டைச் சேர்ந்த இராஜதந்திரி ஒருவர் இது குறித்துக்கருத்து வெளியிடுகையில், ''இந்த அரசாங்கம் இப்பொழுது புதிதாகவே உள்ளது. ஆனால் இந்த அரசாங்கம் எந்தத் திசையை நோக்கிச் செல்கின்றது என்பதைத் தெளிவுபடுத்தக் கூடிய ஒன்றிணைந்த கொள்கைப் பிரகடனம் ஒன்றைப்பெறவே நாம் விரும்புகிறோம்'' எனத் தெரிவித்திருந்தார். இதுவே மேற்குலகின் உண்மைநிலையை விளக்கப் போதுமானதாகும்.

அதாவது, கடன் வழங்கிய வட்டிக்கடைக்காரன் ஒருவன் முதலும், வட்டியும் பாதுகாப்பாக வந்து சேருமா? எனக் கொண்டுள்ள கரிசனையே இதுவாகும். அதை விடுத்து, இனப்பிரச்சினை குறித்தோ, பாதுகாப்புச் செலவீனங்களின் அதிகரிப்புக் குறித்தோ அவை கவலைப்படுவதுபோல் காட்டிக் கொள்வதுவெறும்ஏமாற்றாகும். தமது மூலதனம் மீட்கப்பட முடியாத அளவுக்கு கடனில்நாடு மூழ்கிப் போகாமலும், அதேவேளை உள்நாட்டு போர்தமது மூலதனத்தைப் பாதிக்காத வரையிலும் இருந்தால், அவர்கள் வேறு எதைப் பற்றியும் பெரிதும் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. உதவி வழங்குவதை நிறுத்தப் போவதுமில்லை!

---

கொண்ட காலம் ஒன்று இருந்தது. டைம் பத்திரிகை அட்டையில் இந்தியாவைப் புதிய பிராந்திய வல்லரசு என்று அழைத்தது இதை ராஜீவ் அரசின் ''மேரா பாரத் மஹான்' நிகழ்ச்சி ஐந்து கோடி டெலிவிஷன்களில் எதிரொலித்தது. இதெல்லாம் இப்போது யாருக்கும் நினைவில்லை. மந்திரம் பட்டது போன்ற நாட்கள் அவை. அதி நவீன கடற்படை; வான் வெளித் தாக்குதல் பிரிவு; ஏர்-லேண்ட் பேட்டில் 2000; ஆர்மி பிளான் 2000; ரேபிட்ஸ்; பயிற்சி சாகசங்கள் இலங்கையிலும், மாலைதீவிலும் நமது ராணுவம் தலையிட்டது. 80—களின் தாரக மந்திரமாக நம்மிடம் மிரட்டி வைக்கும் பலம் இருந்தது. ராஜீவ் ஆட்சியிலிருந்த ஐந்து வருடங்களில் பாதுகாப்பு தளபாடங்களுக்கு மாத்திரம் ரூ. 27000 கோடி செலவிடப்பட்டிருப்பதாக அமெரிக்காவின் ஆயுதக்கட்டுப்பாடு ஏஜென்சி தெரிவிக்கிறது. இந்த உச்சத்திலிருந்து சௌத்பிளாக் இப்போது கீழிறங்கி சில்லிட வைக்கும் நிதர்சனத்தை உணர ஆரம்பித்திருக்கிறது. கிழடு தட்டி வலுவிழந்த, தேய்ந்துபோன ராணுவ இயந்திரம் மெல்ல மெல்ல உயிர்

தின் இரண்டாம் நாளிலேயே கூட கவசப் படைகளை முழு பலத்தில் நிறுத்த முடியாமல் போகலாம். விமானப் படையிலும் இதே நிலைமைதான்.

2000-ம் வருடத்தில் 80 கவசப்படை ரெஜிமெண்டுகளை உருவாக்குவது, அனைத்து தரைப்படை பட்டாலியன்களையும் இயந்திரமயமாக்குவது என்று சுந்தர்ஜி திட்டமிட்டார். இப்போது 59 கவசப்படை ரெஜிமெண்டுகள் இருக்கின்றன. பாகிஸ்தானின் ஸ்கோர் 39. இதே மாதிரி விமானப் படையின் நவீனமாக்கல் திட்டமும் கலகலத்துப் பாய்விட்டது. 47 ஸ்க்வாட்ரன்களிலிருந்த விமானங்களை நவீனமயமாக்கியிருக்க வேண்டும். ஆனால் ஸ்க்வாட்ரனின் எண்ணிக்கை 35 ஆக குறைந்ததுதான் மிச்சம். இதில் மிரூசியத்திற்கு அனுப்ப வேண்டிய மிக் 21-ரக விமானங்களும் அடக்கம். ஹைதர் காலத்து லியாண்டர் போர் கப்பல்கள் மற்றும் ஃபாக்ஸ்ட்ராட் நீர்மூழ்கி கப்பல்களை தலைமுழுக வேண்டும் என்கிற கப்பற்படையின் திட்டத்திற்கும் இதே கதி.

> இந்தியா டுடே இதழின் ஏப்ரல் 21 – மே 5 திகதியவெளியீட்டில் ''பாதுகாப்பு அரணில் உடைப்புகள்'' என்ற தலையங்கத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டுரையின் முக்கிய பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

பெற்றும் அவற்றை வாங்க பணவசதி இல்லை. முன்னணி போர் விமானங்கள் புதிது புதிதாக வருகிற இந்தக் கால கட்டத்தில்சமீபத்தியதொழில்நுட்பங்களைக் கொண்ட ஜெட் விமானங்கள் இல்லாமல் விமானப்படையால் ஒன்றும் செய்ய முடியாது.

பயிற்சிக்கு ஒதுக்கப்படும் தொகையை வெட்டுவதுதான் பெரிய கொடுமை இராணுவம் பெரிய அளவிலான போர் ஒத்திகையை நடத்தவில்லை. குண்டுகளை உற்பத்திசெய்யும் யூனிட்கள் தங்களுக்குத் தரப்படும் ஆர்டரில் 20% குறைவு

யன் உடைந்து போனதில் பண நெருக்கடியை மிகவும் மோசமாக்கி இருக்கிறது. ஆனால் நிஜமான பிரச்சினை கைவசம் இருக்கும் சோவியத் தளபாடங்கள். ஆயுதங்களைப் பராமரிப்பதுதான். ரஷ்யர்கள் உதவ விரும்பினாலும் இப்போது தொழிற்சாலைகள் அவர்கள் கையில் இல்லை. முன்னைய சோவியத் யூனியனின் ராணுவ தொழிற்சாலைகள் இப்போது பல குடியரசுகளிலும் பரவிக் கிடக்கின்றன. உதாரணமாக, இந்திய விமானப்படை பயன்படுத்தும் போக்குவரத்து விமானங்களுக்கான கட்டுமானம் இப்போது உக்ரைனிலிருக்கிறது. ரஷ்யாவில் இல்லை. இதனால் உதிரி பாகங்கள், மற்ற கருவிகளை இந்தப் புதிய குடியரசுகளிடமிருந்து பெறுவது அவ்வளவு சுலபமில்லை.

உள்நாட்டில் நடக்கும் கலவரங்களை சமாளிக்க கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதால் ராணுவத்திற்கு ஓய்வொழிச்சல் இல்லாமல் போகிறது சில இடங்களில் இடைவெளியின்றி ஏழு வருடங்கள் தங்கி இருக்கவேண்டியுள்ளது. விதிமுறைப்படி 2 ஆண்டுகளுக்கு மேல் தங்கக்கூடாது.

இந்திய ராணுவம் ஒன்றுதான் போர் இல்லாத போதும் பிஸியாக இருக்கிறது. உள்நாட்டிலும், இலங்கையிலுமாக கடந்த பத்து ஆண்டுகளில் 10,000 ராணுவ வீரர்கள் பலியாகி இருக்கிறார்கள். இதன் விளைவாக துப்பாக்கிப்படையின் பெரும்பாலான பிரிவுகள் ஓய்ந்து போயுள்ளன.

இந்தியாவின் தயார் நிலை மோசமாக இருப்பதால் எதிரிகள் நம்மை சீண்டுவதற்குத் துணியக் கூடும் என்று அனலிஸ்ட்கள் அஞ்சுகிறார்கள். காஷ்மீரில் பாகிஸ்தான் சிறிய அளவில் யுத்தம் செய்து வருவதற்கு இது ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

ராணுவம் மிகவும் தயார் நிலையில் இருந்தால்தான் 70களின் இறுதியிலும், 80களிலும் போர் வராமல் தடுக்க முடிந்தது; அந்தத் தயார் நிலை இப்போது தேய்ந்து வருகிறது என்று யுத்த வியூகம் பற்றி சிந்திப்பவர்கள் கூறுகிறார்கள்.

---

# தனிநாயகம் அடிகளின் பணி பாராட்டப்பட வேண்டியது

### பேராசிரியர் கா. சிவத்தம்பி

உலகளாவிய ரீதியில் தமிழ், தமிழர் பண்பாடு என்பன ஆராயப்பட வேண்டியதேவை எழுந்த போது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிறுவனத்தை ஏற்படுத்தியும், தமிழ்ப் பண்பாடு என்ற உலகளாவிய இதழையும் வெளியிட்டும் தமிழ்த்தூதுவராக தந்தை தனிநாயகம் அவர்கள் ஆற்றிய பணி பாராட்டிற்குரியதாகும். இவ்வாறு பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தெரிவித்தார்.

விசாரணைகுழுவருகை

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பேராசிரியர் மேலும் கூறுகையில்; தந்தை தனிநாயகம் அடிகளார் சங்க இலக்கியத்தை மானிட இயல் கண்ணோட்டத்தில் கண்டார். மானிட இயல் அணுகுமுறையை தமிழ் இலக்கியத்தில் கொணர்ந்த பெருமை இவரையே சாரும். தமிழில் இரண்டு முக்கிய அம்சங்கள் உண்டு. ஒன்று சமயச் சார்பு அற்ற சங்க இலக்கியங்கள் மற்றையது பக்தி இலக்கியங்கள். இந்த பக்தி இலக்கியங்களை உலகத்திற்கு எடுத்துக் காட்டியவர்களில் தனிநாயகம் அடிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

தனிநாயகம் அடிகளார் பண்பாட்டையும், சமயத்தையும் இணைப்பதில் பெரும் பங்காற்றினார். தமிழனாக இருப்பது கிறிஸ்தவனாக இருப்பது ஒன்றுக்குஒன்று முரணானது அல்ல என்பது அடிகளாரின் உறுதியான கருத்தாக இருந்தது. காலத்திற்கேற்ற முறையில் தனிநாயகம் அடிகளாரைப் பின்பற்றி தமிழில் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தமிழ்ப் பண்பாட்டின் வேர்களை இந்த மண்ணில் ஆராய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

---

# திருமதி கொப்பேகடுவவிற்கு அறிவிக்கப்படவில்லை

(கொழும்பு)

அராலித்துறை கண்ணி வெடிச்சம்பவத்தில் பலியான லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணம் குறித்து விசாரிக்க பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக்குழு கொழும்பு வந்தது குறித்து திருமதி லாலி கொப்பேகடுவவிற்கு ஆரம்பத்தில் அறிவிக்கப்படவில்லை.

தனது கணவர் கொப்பேகடுவவின் கொலை குறித்து விசாரணை நடத்த சர்வதேச விசாரணைக் குழுவை அழைக்குமாறு கோரிக்கையை திருமதி கொப்பேகடுவவே விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் ஜெனரல் கொப்பேகடுவவின் நலன்களை கவனிக்கும் சட்டத்தரணிக்கு விசாரணைக்குழு வருகை முதல் தினமே அறிவிக்கப்பட்டதாம்.

---

# விளையாட்டு

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்காக நடைபெற்ற இறுதி கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்சென்ஜோன்ஸ் கல்லூரி 17வயதுப் பிரிவில்மிகவும் சிறப்பாக விளையாடி கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தை 2-1 என்ற வித்தியாசத்தில் வெற்றியீட்டி லெப். கேணல் றீகன் நினைவு வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவில் புனித சம்பத்திரிசியார் கல்லூரிஹாட்லிக் கல்லூரியை 3-1 என்ற வித்தியாசத்தில் வெற்றி ஈட்டி லெப். கேணல் ஜோய் நினைவு வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டி நிகழ்விற்கு பலாலி ஆசிரியர் கல்லூரி அதிபர் திரு. ஆர். எஸ். நடராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இப்போட்டி 2-ம் திகதி புதன்கிழமை திருநெல்வேலி பலாலி ஆசிரியர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

பெருந்திரளான கரபந்தாட்ட ரசிகர்களும் பொது மக்களும் இப்போட்டிகளை பார்வையிட்டனர். (42)

★

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை 7-ம் திகதி பிற்பகல் 2மணிக்கு நடைபெறவிருக்கின்றன. பிரதம விருந்தினராக வடமராட்சிக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை கலந்து கொள்கிறார். (30)

★

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்ப பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளைதிங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக வடமராட்சிக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.எஸ். செல்லத்துரை கலந்து கொள்ளுகின்றார். (30)

★

(யாழ்ப்பாணம்)

டொனால் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 ஓவர் கொண்ட கிரிக்கட்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று காலை9-00மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதி ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைட் அணி விளையாடுகிறது.

ஈழநாதம்

# பாட்டாளி மக்கள் கட்சி தடை பரிசீலனையில் உள்ளது

## மத்திய இணை அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியைத் தடைசெய்வதற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணை இன்னமும் மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக மத்திய நலத்துறை இணை அமைச்சர் தங்கபாலு தெரிவித்தார். தேசவிரோத கட்சிகளை காங்கிரஸ்என்றைக்குமே எதிர்க்கும் என மேலும் அவர்தெரிவித்தார்.

மேலும்; புலிகள் சிறையிலிருந்து தப்புவதை மாநில அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும், ஒரு மாநில அரசுக்குச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் கடமை உள்ளது என்றும், மத்திய அரசு மீது குற்றம் சாட்டித் தப்பிதுக்கொள்ள முடியாது என்றும் மத்திய நலத்துறை இணையமைச்சர் தங்கபாலு தெரிவித்தார்.

தமிழ் நாட்டிலுள்ள சிறைகளிலிருந்து சமீப காலமாகப் புலிகள் தப்பித்து வருவதற்கு மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டுமென முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியது பற்றி நேற்று மதுரையில் செய்தியாளர் கேட்டபோது அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

## 6000 போக்குவரத்து ஊழியர் தமிழ்நாட்டில் கைது

(சென்னை)

தமிழ்நாட்டில் அரசபோக்குவரத்துக் கழகங்களை சேர்ந்த சில தொழிற் சங்கங்கள் நேற்று வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விட்டிருந்ததை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மூவாயிரதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

மாநிலம் முழுவதும் அரசின் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் தாமாகவே முன்வந்து கைதாவதாகவும் பொலிசாரால் மேலும் கூறப்பட்டுள்ளது.

## ஊழியர் கைதானமைக்கு தி. மு. க. கண்டனம்

போக்குவரத்து தொழிலாளர் மாநில அரசுக்கு உரிய முறையில் அறிவித்துவிட்டுத் தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாகவும், எனவே போக்குவரத்து ஊழியர்கள் கைதுசெய்யப்படுவது கண்டிக்கத்தக்கது எனவும் திராவிட முன்னேற்றக் கழகம் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழக செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களை தனியார் மயமாக்க முனைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஆளுநர் - கருணாநிதி சந்திப்பு

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியை ராஜ் பவனில் நேற்று சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பு 45 நிமிடங்கள் நீடித்தது. இது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று தி. மு. கவின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

## பா. ஜ. கட்சித் தலைவராக அத்வானி தெரிவானார்

(டில்லி)

லால் கிருஷ்ணன் அத்வானி பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவராக இரண்டு ஆண்டு பதவிக்காலத்துக்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

டாக்டர் முரளி மனோகர் ஜோசியிடமிருந்து தலைவர் பொறுப்பை ஏற்கும் அத்வானி, மூன்றாவது முறை

## மாட்டுவண்டி சவாரி ஒத்திவைப்பு

ஆவரங்கால் விவசாயிகளால் 06-06-93 இன்று நடைபெற இருந்த மாட்டுவண்டி சவாரி ...

## உதைபந்தாட்டம்

(தொல்புரம்)

சுழிபுரம் சத்தியா விளையாட்டுக் கழகம் நடாத்தும் 11 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும், பரிசில்கள் வழங்கல் வைபவமும் இன்று பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (41

## பரிசுத் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசுத் தினம் வரும் செவ்வாய்க்கிழமை மு. ப. 9மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில் வழங்குவார்.

## நூற்றாண்டு விழா

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையின் ' நூற்றாண்டுவிழா'' ஜூலை மாதம் 25ஆம் திகதி விமரிசையாக நடைபெறவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் நடாத்தப்படவுள்ள இவ்விழாவின் போது விழா நினைவு மலரும் வெளியிடப்படவுள்ளது.

இவ்விழா சம்பந்தமான ஏற்பாடுகளுக்கான ஆலோசனைகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சபை பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கிறது.

(யோ)

## நீதிபதி தீர்ப்பை எதிர்த்து மனு தாக்கல் செய்யப்படும்

### புதுடில்லியில் அதிகாரி அறிவிப்பு

(டில்லி)

ஆர். எஸ். எஸ். மற்றும் பஜ்ரங்தன் போன்ற அமைப்புகள் மீதான மத்திய அரசின் தடை உத்தரவை நீக்கும்படி நீதிபதி பஹாரியா தலைமையிலான நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பிற்கு எதிராக மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்யும் என்று புதுடில்லியில் அரச அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்வதற்கு முன்பாக பஹாரியா நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அரசு நன்கு ஆராயும்எனவும் தெரிவித்தார்.

## ஐ. என். எஸ். மைசூர் வெள்ளோட்டம்

(டில்லி)

உள்நாட்டிலேயேவடிவமைக்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது பெரிய போர்க்கப்பலான ஐ. என். எஸ். மைசூர் நேற்று முன்தினம் பம்பாய்க்கு அப்பாலுள்ள அரபுக் கடலில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

இந்த வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மகாராஷ்டிரா மாநில முதல்வர் சரத்பவார் இந்தியக்கடற்படையை வலுவாக்க வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தினார். மேலும் இங்கு உரைநிகழ்த்திய கடற்படைத் தளபதி ராம்தாஸ் கடற்படை

# ராஜாங்க அமைச்சர்கள் விரைவில் மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் ராஜாங்க அமைச்சர்கள் மட்டத்தில் மிக விரைவில் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் இவ்வாண்டு இறுதியில் நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை முன்னிட்டே மேற்படி மாற்றம் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் மேலும் தெரியவருகிறது.

இம்மாற்றங்களின்படி தற்போது கடமையில் இருக்கும் சில ராஜாங்க அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவதுடன் மேற்படி ராஜாங்க அமைச்சர் பதவிகளுக்கு சில புதிய முகங்கள் நியமிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### தியாகி

அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி, தியாகி சிவகுமாரன் நினைவுதின ஏற்பாட்டுக்குழுவைச் சேர்ந்த திரு. ஏகாம்பரம் ஆகியோர் நினைவஞ்சலி உரைநிகழ்த்தினர்.

இக்கூட்டத்தின் ஆரம்பத்தில் தமிழீழதேசியக்கொடியை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. இளம்குமரன் ஏற்றிவைத்தார். விடுதலைப் புலிகளின் அரசியல் துறை யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு.இளம்பரிதி ஈகைச் சுடரை ஏற்றிவைத்தார். சிவகுமாரனின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தும், மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து வலிகாமம் கோட்ட கலை, பண்பாட்டுக்கழகத்தினரின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நூற்றுக்கணக்கான மக்கள் இவ்வஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### நுண்கலை

உடபட நான்கு பாடங்களில் சித்தி,பெற்றிருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். அல்லது க. பொ. த. (உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இவை இரண்டும் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்று நான்காவது பாடத்தில் 25 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். இவற்றுடன் நான்கு பாடங்களிலும் மொத்தமாக 180 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். 1990/91 க. பொ. த. (உயர்தரம்)பரீட்சை முடிவுகள் அனுமதிக்காக எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இசை மற்றும்நாட்டியத்தில் ஆர்வமுள்ளவர்கள் இத் துறைகள் சார்ந்த கற்கை நெறியில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இது வாய்ப்பாகிறது

## விளையாட்டுப் போட்டியும் கலைவிழாவும்

(வடமராட்சி)

கடலிலும் தரையிலும் பல காவியங்கள் படைத்த பொலிகை மண் பெற்றெடுத்த காவிய நாயகர்கள் நினைவாக பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டியும், கலை விழாவும் எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் கழக மைதானத்தில் நடைபெறும்.

இவ் விளையாட்டுக்களில் ஆண்களுக்கான பத்து மைல் மரதன் ஓட்டம். பெண்களுக்கான ஐந்து மைல் மரதன் ஓட்டம், கழகங்களுக்கிடையிலான அஞ்சல் ஓட்டம், குத்துச் சண்டை, மல்யுத்தம், தலையணைச் சணடை, கம்பு இழுத்தல், கை மடித்தல். பெண்கள் ஆண்களுக்கான கயிறு இழுத்தல், வினோத உடை ஆகியன இடம் பெறும்

அதனைத் தொடர்ந்து சாண்டே எம். துரைரத்தினம் அவர்களின் பயிற்சியைப் பெற்ற கழக வீரர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. மற்றும் நாடக விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(யோ)

### யாழ். மாநகர

சங்கத்தைச் சேர்ந்த செல்வி யோசப்பினும், சிறப்பு விருந்தினர்களாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### எதிர்க்கட்சிகள்

தங்கள் கட்சி உறுப்பினர் மீது நம்பிக்கைஇல்லைஎன மேலும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலிலும் நான்தான் முதல் அமைச்சராக வருவேன். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை எனத் தெரிவித்தார்.

## காடுகள் அழிப்பு

(கொழும்பு)

45 வருட காலத்தில் இலங்கையின் காட்டுவளம் சரி அரைவாசியாக குறைந்து விட்டதென உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பில் நடைபெற்ற மாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டது.

1948ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த பரப்பில் 50 சதவீதமான பகுதி காடாக இருந்தது எனவும்தற்பொழுது அது 25 சதவீதமாக குறைந்துவிட்டது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

### அரசியல்

வதாகவும் ஐவன் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிற்குள் அநுரா-சந்திரிகா மோதல் பலமடைந்துள்ளதாகவும் இம்மோதலைப் பயன்படுத்தி மூன்றில்இரண்டு பங்கு உறுப்பினர்களின் வாக்குகளை பாராளுமன்றத்தில் பெற்று விட முடியும் என ஜனாதிபதி நம்புவதாகவும் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 05-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9716

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9676, 42-3114, 28-7978, 26-7302, 24-4103
26-1376, 24-4807, 41-1665, 24-6475, 27-1542

வும், எனவே போக்குவரத்து

## ஆளுநர் - கருணாநிதி சந்திப்பு

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியை ராஜ் பவனில் நேற்று சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பு 45 நிமிடங்கள் நீடித்தது. இது ஒரு மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று தி. மு. கவின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

இது தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழக செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களை தனியார் மயமாக்க முனைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி பஹாரியா தலைமையிலான நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பிற்கு எதிராக மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்யும் என்று புதுடில்லியில் அரச அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

## பா. ஜ. கட்சித் தலைவராக அத்வானி தெரிவானார்

(டில்லி)

லால் கிருஷ்ணன் அத்வானி

பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவராக இரண்டு ஆண்டு பதவிக்காலத்துக்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

டாக்டர் முரளி மனோகர் ஜோசியிடமிருந்து தலைவர் பொறுப்பை ஏற்கும் அத்வானி, மூன்றாவது முறையாக இப்போது கட்சித் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

## ஐ.என்.எஸ். மைசூர் வெள்ளோட்டம்

(டில்லி)

உள்நாட்டிலேயேவடிவமைக்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது பெரிய போர்க்கப்பலான ஐ. என். எஸ். மைசூர் நேற்று முன்தினம் பம்பாய்க்கு அப்பாலுள்ள அரபுக் கடலில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

இந்த வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மகாராஷ்டிரா மாநில முதல்வர் சரத்பவார் இந்தியக் கடற்படையை வலுவாக்க வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தினார். மேலும் இங்கு உரைநிகழ்த்திய கடற்படைத் தளபதி ராம்தாஸ் கடற்படையின் தொழில் நுட்ப ஆற்றல் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ணப்பிக்கலாம். அல்லது க. பொ. த. (உயர்தரம்) ஒரே முறையில் சங்கீதம் அல்லது நடனம் அல்லது இவை இரண்டும் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்று நான்காவது பாடத்தில் 25 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். இவற்றுடன் நான்கு பாடங்களிலும் மொத்தமாக 180 புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும். 1990/91 க. பொ. த. (உயர்தரம்)பரீட்சை முடிவுகள் அனுமதிக்காக எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இசை மற்றும் நாட்டியத்தில் ஆர்வமுள்ளவர்கள் இத் துறைகள் சார்ந்த கற்கை நெறியில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இது வாய்ப்பாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சிகள்

தங்கள் கட்சி உறுப்பினர் மீது நம்பிக்கைஇல்லைஎன மேலும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாகாண சபைத் தேர்தலிலும் நான்தான் முதல் அமைச்சராக வருவேன். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை எனத் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிற்குள் அநுரா-சந்திரிகா மோதல் பலமடைந்துள்ளதாகவும் இம்மோதலைப் பயன்படுத்தி மூன்றில்இரண்டு பங்கு உறுப்பினர்களின் வாக்குகளை பாராளுமன்றத்தில் பெற்றுவிட முடியும் என ஜனாதிபதி நம்புவதாகவும் விக்டர் ஐவன் தெரிவித்தார்.


## மாட்டுவண்டி சவாரி ஒத்திவைப்பு

ஆவரங்கால் விவசாயிகளால் 06-06-93 இன்று நடைபெற இருந்த மாட்டுவண்டி சவாரி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு எதிர்வரும் 13-06-93 பி. ப. 2 மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் இடம் பெறும் எனபதை அறியத்தருகின்றோம்.

போட்டி அமைப்பாளர்
(5043) பொ. ஐட்சனாமூர்த்தி



உ

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## பரிசுத் தினம் - 1993

08-06 93 செவ்வாய்க்கிழமை மு. ப. 9 30 மணி

முதன்மை விருந்தினர்

திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள்

(மாநிலக் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

பரிசில் வழங்கல்

திருமதி தேவராணி சுந்தரலிங்கம் அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

05-06-93 (சி/6782)



## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 05-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9716

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9676, 42-3114, 28-7978, 26-7302, 24-4103
26-1376, 24-4807, 41-1665, 24-6475, 27-1542
26-6026- 42-3815, 28-5862, 28-8037, 40-0262
27-9756, 26-4393, 27-5907, 27-3927.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9530, 28 4550, 41-0976, 26-5760, 28-8367
28-3528, 41-5979, 42-6157, 40-7583, 26-4895
24-4854, 26-3594, 27 8155, 28-1799, 24-5496
24-5418, 27-4239, 28-1862, 43-2524, 26-6029
26-3998.


ஜம்மு காஷ்மீரில்

## இராணுவ நடவடிக்கைகள் பயன் அளித்துள்ளதாம்

(டில்லி)

-ராஜேஷ் பைலட்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளைஒடுக்குவதற்கு இராணுவமும். இராணுவத்தின் துணைப்படைகளும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள்பெரும்பயனை அளித்திருப்பதாக இந்திய அரசின் உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சிறிநகர் ராஜ்பவனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்த மாநிலம் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படும் என்று வெளிவந்த செய்திகளை வன்மையாக மறுத்தார்

நிவாரணப்

முன்வைத்தகோரிக்கை நியாயமானது என்று கூறிய அரச அதிபர் தாம் இது பற்றி சிறிலங்கா அரசிடம் மீளவும் வலியுறுத்தப் போவதாகக் கூறினார்.

மாகாண

ரத்தைப் பகிர்ந்து வழங்கவே அரசாங்கம் தயங்கும்போது தமிழர்களுக்கு என்ன அதிகாரத்தை வழங்கப் போகிறார்கள்? என தமிழ்மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

மாகாணசபையின் ஆரம்ப சட்டங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை. ஒரு மாகாண சபையை குறித்த ஒரு கட்சி கொண்டு நடத்த முடியும் என ஆளுநர் கருதுவாரேயானால் அவர் அக் கட்சியை ஆட்சியமைக்குமாறு அழைக்க ஆளுநருக்கு அதிகாரம் உண்டு அந்த அதிகாரத்தையே தென், வடமேல் மாகாண ஆளுநர்கள் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் ஆளுநர்களின் இந் நடவடிக்கை சரியென நான் கூறவில்லை.

''மாகாணசபை முறையில் சில விடயங்களை மாகாண அரசோ, மத்திய அரசோ செயற்படுத்த முடியாத நிலை தோன்றும். இவற்றுக்கான முழு அதிகாரமும் இரண்டு அரசாங்கங்களிடமும் வழங்கப் படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள பலரினதும் தனிப்பட்ட கருத்து மாகாண சபை முறை தேவையில்லை என்பதாகும்'' என காமினி பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

செய்தித் தொடர்புசாதனங்கள் பற்றி கருத்து வெளியிட்ட அவர் ''தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை என்பன சுதந்திரமாக இயங்க அனுமதியளிக்கப்பட வேண்டும்'' என்றார்.

## அங்கோலாவில் மோதல்; 20 லட்சம் பேர் பாதிப்பு

(ஜெனிவா)

அங்கோலாவில் அரசுப்படைகளுக்கும் யூனிட்டா கிளர்ச்சியாளர்களுக்கும்இடையே மீண்டும் மோதல் தொடங்கியிருப்பதாகவும் இதனால் அங்கோலாவின் நகர மையங்கள் மற்றும் எண்ணெய்க் கேந்திரங்களும் மிக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அங்கோலாவில் இருக்கும் ஐ நாவின் சிறப்புத் தூதுவர் ஜெனிவாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; இப்போரின் விளைவாக சுமார் இருபது லட்சம் மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப் பட்டிருப்பதாகவும், அங்கோலாவிற்கு உதவும்முகமாக 22 கோடியே 60 லட்சம் டாலர்களைத் தந்துதவுமாறு ஐ. நா. உதவி வழங்கும் நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

## கால்நடை வளர்ப்பு பயிற்சி நெறி

கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி நெறியொன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தில் யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த 24-ம் திகதி தொடக்கம் 2-ம் திகதி வரை நடாத்தப்பட்டது.

தினமும் காலை 9 மணி முதல் 5 மணிவரை இலவசமாக நடைபெற்ற இப்பயிற்சியில் கால்நடைகள் பராமரிப்பு, உணவூட்டல், இனவிருத்தி நோய்களும் தடுப்பு முறைகளும், பண்ணைக் கணக்குப் பதிவேடுகள் வைப்பு முறைகள் என்பன தொடர்பான பயிற்சிகள் செய்முறைகளாகவும், போதனா முறைகளாகவும் வழங்கப்பட்டன இதில் பலர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

எறிகணை

டனர்.

இவ் எறிகணைகள் பொன்னாலைச் சந்தியிலும், மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. (41) (யோ)


யாழ்நகர்

## ஸ்ரீதர் திரையரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

இரண்டாவது வெற்றிப் படைப்பு

## "இது எங்கள் தேசம்"

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10. 30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6736]



## எடிசன் அக்கடமி

[யாழ். இந்துக்கல்லூரி அருகாமையில்]

411/1, கே கே. எஸ். வீதி: யாழ்ப்பாணம்.

O/L Day Class
Sat & Sun Class

புதிய பிரிவுகள் ஆரம்பம் :

8-6-93செவ்வாய்மு.ப.8மணி

★ எமது வழமையான ஆசிரியர் குழுவால் வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்.

O/L கணிதம்

புதிய பிரத்தியேக வகுப்பு

ஆசிரியர்:

திரு. B. P. பாஸ்கரன்

★ மேலதிக வகுப்புகள் மூலம் பாடத்திட்டம் முற்றாகப் பூர்த்தியாக்கப்படும்.

ஆரம்பம் :

8-6-93செவ்வாய் பி.ப.5மணி

(சி-6783)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது